பக்கங்கள்: 09 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | பங்குனி 20 வியாழக்கிழமை 03.04.2020 | கதிர் 17

## கொரோனோப் பரிசோதனை இன்று முதல் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.03

கொரோனோ தொற்றுப் பரிசோதனைகள் இன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளன என யாழ் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளார்.

கொரோனோ தொற்று பரிசோதனைகள் கடந்த புதன்கிழமை முதல் யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பிக்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்ட நிலையில் அதற்கான

# அத்தியாவசியப் பொருள்கள் தாராளமாகக் கையிருப்பில்!

### நம்பிக்கையூட்டுகின்றது அரசு

கொழும்பு,ஏப்.03

தொடர்பில் பிரச்சினை இல்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சரவை இணைப் பேசாளரும் அமைச்சருமான கலாநிதி ரமேஷ் பத்திரன இதுதொடர்பாகத் தகவல் வெளியிட்டார்.

அவர் இது குறித்துத் தெரிவிக்கையில் -

எதிர்வரும் நான்கு மாதங்களுக்குத் தேவையான அரிசி, மரக்கறி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

2☞

## உயிரிழந்த நான்காவது நபர் இந்தியா சென்று திரும்பியவர்

கொரோனா தொற்றுக்குள்ளாகி இலங்கையில் உயிரிழந்த நான்காவது நபர், இந்தியா சென்று நாடுதிரும்பியவர் என்று தெரிவிக்கப்படுகிறது

இவர் இரத்மலானை - வெடிகந்தை பகுதியைச் சேர்ந்தவரெனத் தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்த நான்காவது நபர் இவர் கொழும்பு ஐ.டீ.எச். வைத்தியசாலையில் வைத்து நேற்று உயிரிழந்தார்.

2☞

## தடைகளை மீறிப் பறந்த வாகனம்; சுட்டு மடக்கினார்கள் பொலிஸார்!

### மூவர் காயம்; அவர்களுடன் மொத்தம் நால்வர் கைது

கொழும்பு, ஏப்.03

கொழும்பில் இருந்து மொரட்டுவை, நோக்கி பயணித்த வாகனம் மீது எகொடஉயன பகுதியில் நேற்றிரவு பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதன்போது அதில் பயணித்த 4 பேரில் 3 பேர் காயமடைந்தனர். அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்கள் பொலிஸாரின்

2☞

## முதலை கடித்து சிறுவன் சாவு!

### மட்டு. மைலந்தனையில்!

மட்டக்களப்பு - வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புணானை மைலந்தனை பிரதேசத்தில் முதலை கடித்த நிலையில் சிறுவன் ஒருவரின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது.

2☞

## மற்றொருவர் பூரண சுகத்துடன் வெளியேறினார்

கொழும்பு,ஏப்.03

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட மற்றுமொரு நபர் பூரணமாகக் குணமடைந்துள்ளார் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய முழு நாட்டிலும் கொரோனா தொற்றினால் 151 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

2☞

# தொற்றை முடக்கும் முயற்சியில் முனைப்பாகப் புலனாய்வுப் பிரிவு

### களத்தில் இறக்கப்பட்டது

கொழும்பு, ஏப். 03

கொரோனா நோய்த் தொற்று மற்றும் பரம்பலைக் கட்டுப்படுத்திமுடக்கும்முயற்சியின் ஒரு கட்டமாக அரச புலனாய்வுப் பிரிவு முழு முனைப்பாக - போர்க் கால நடவடிக்கை போன்று - களத்தில் இறக்கப்பட்டிருப்பதாகக் கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளிவிட்டன.

கொரோனா தொற்றுத் தொடர்பில் சில விடயங்கள் இனவாதப் போக்கில் பிரசாரப்படுத்தப்படுகின்றன.

இதனால் இந்த விடயம் இனவாதக் காலம் பூசப்பட்டு, பூதாகரமாக்கப்பட்டு நிலைமையை மிக மோசமடைய வைக்கலாம் என்று அரசுத் தலைமைக்கு எச்சரிக்கை கிட்டியிருப்பதாக கூறப்படுகின்றது.

அதையடுத்தவிடயங்களைமுழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக அரச புலனாய்வுப் பிரிவு முழு முனைப்பாகக் களமிறக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

வெறுமனே இந்த நோய்த் தொற்றாளர்கள் சமூகத்தில் மறைந்திருக்கின்றமையைக் கண்டு பிடிக்கின்றமை மட்டுமன்றி, இந்நோயைத் திட்டமிட்டுப் பரப்பக் கூடிய சக்திகள் ஏதேனும் செயற்பட்டால் அவற்றை மடக்குவதும் அரச புலனாய்வுப்பிரிவுகளமிறக்கப்பட்டதின் முக்கியநோக்கங்களில் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டது.

## எஞ்சிய அறுவருக்கும் தொற்று இல்லை

- எஸ்.நிதர்ஷன் -

கொரோனோ சந்தேகத்தில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஏனைய ஆறுபேருக்கும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அவர்களுக்கும் கொரோனோ தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப்

2☞

## அசால்ட்டாகக் கையாள்கிறது ராஜபக்ஷக்களின் அரசாங்கம்

### சான்றிதழ் கொடுக்கின்றார் வியாழேந்திரன்



கொரோனா வைரஸை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை ராஜபக்ஷ அரசாங்கம் சிறப்பான முறையில் முன்னெடுத்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

2☞

## பாரிய நிதி மோசடிக் குற்றம் சாட்டப்பட்ட உதயங்க வீரதுங்கவுக்குப் பிணையில்!

### கொரோனா அச்சுறுத்தலால் கிடைத்த அதிர்ஷ்டம்



கொழும்பு,ஏப்.03

மிக் ரக விமானக் கொள்வனவில் பாரிய நிதி ஊழல்களில் ஈடுபட்டவர் எனக் கூறப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த

2☞

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## பாரிய நிதி மோசடிக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொரோன வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக சிறைகளில் நெரிசலை குறைக்கும் நடவடிக்கைகளின் கீழேயே அவருக்குப் பிணை கிட்டியிருப்பதாகக் கூறப்பட்டது.

ஏற்கனவே அவர் ரஷ்யாவின் தூதுவராக இருந்தபோது மிக் விமானக்கொள்வனவு மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. இதனையடுத்து அவர் இலங்கை வருவதை தவிர்த்து வந்தார்.

பின்னர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் தங்கியிருந்த நிலையில் - புதிய ஆட்சிப்பீடம் இங்கு அதிகாரத்துக்கு வந்ததும் - இலங்கைக்கு அவர் அழைத்து வரப்பட்டார்.

இதன் பின்னர் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் விசாரணைகளும் இடம்பெற்று வந்தன.

இந்நிலையில் கொரோன வைரஸ் காரணமாக சிறைகளில் நெரிசலைக் குறைக்கும் வகையில் சிறுகுற்ற கைதிகளுக்குப் பிணை வழங்கும் வகையில் இன்று இடம்பெற்ற நீதிமன்ற விசாரணைகளின் போதே உதயங்க வீரதுங்கவும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய உறவினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தடைகளை மீறிப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாதுகாப்புடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மொரட்டுவைநகரில் உள்ள வீதித்தடையில் வாகனத்தை நிறுத்துமாறு பாதுகாப்பு தரப்பினரால் சமிக்ஞை செய்யப்பட்டுள்ளது.

எனினும், அங்கு பொலிஸா ரின் கட்டளையை மீறி பயணித்த அந்த வாகனம் எகொடஉயன பகுதிக்கு அருகில் உள்ள வீதித்தடையிலும் நிறுத்தாமல் பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் எகொடஉயன புதிய பாலத்துக்கு அருகில் உள்ள வீதித்தடையில் வாக னத்தை நிறுத்துமாறு சமிக்ஞை பிறப்பிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

அப்போது அந்த வாகனம் பொலிஸார் இருந்த திசையை நோக்கி வேகமாகப் பயணித்துள்ளதுடன், அவர்களை மோதிச் செல்வதற்கு முயற்சித்ததாகவும் கூறப்படுகின்றது. அப்போதே பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வாகனத்தில் பயணித்தவர்கள், பத்தரமுல்லை பெலவத்தை பகுதியைச் சேர்ந்தவர்கள் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

## அத்தியாவசியப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எரிபொருள் மற்றும் மருந்துப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்களின் இறக்குமதியை இரத்து செய்யவும் வரையறைக்கு உட்படுத்தவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சரவை இணைப்பேச்சாளர் தெரிவித்தார்.

## மற்றொருவர் பூரண ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனத் தொற்றினால் 150 இற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு கூறியுள்ளது.

இன்றைய தினம் ஒருவர் குணமடைந்த நிலையில் மொத்தமாக 22 பேர் கொரோனா தொற்றிலிருந்து பூரண சுகமடைந்துள்ளனர். 125 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட நான்காவது இலங்கைப் பிரஜை நேற்று இரவு உயிரிழந்தார்.

இதன்பிரகாரம் கொழும்பு மாவட்டத்தில் 36 பேரும், புத்தளத்தில் 25 பேரும், களுத்துறையில் 24 பேரும், கம்பஹாவில் 11 பேரும் கொறொனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தலா 4 பேரும், இரத்தினபுரியில் 3 பேரும், குருநாகலில் இருவரும், காலி, கேகாலை, மட்டக்களப்பு பதுளை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்க ளில் தலா ஒருவரும் கொரோ னாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை 34 கொரோனா நோயாளர்கள் கொரோனா தனிமைப்படுத்தல் முகாம்களில் இருந்து அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு கூறியுள்ளது.

அங்கொடை தொற்று நோயியல் வைத்தியசாலையில் இரண்டு வெளிநாட்டவர்கள் உட்பட 99 பேரும், கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் 14 பேரும், வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலையில் 12 பேரும் கொரோனா தொற்றுக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேவேளை கொரோனா தொற்று சந்தேகத்தின் பேரில் நாடாளவிய ரீதியிலுள்ள 28 வைத்தியசாலைகளில் 250 பேர் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## அசால்ட்டாகக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியின் போது கொரோனா தொற்று ஏற்பட்டிருக்குமாயின், குறிப்பிட்ட காலத்திற்குள் நூற்றுக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருப்பார்கள் எனவும் அவர் சாடியுள்ளார்.

மட்டக்களப்பில் இன்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்து வெளியிட்ட வியாழேந்திரன், உலக நாடுகளை அச்சுறுத்தியுள்ள கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்கு நாட்டின் அனைத்து துறைகளும் முக்கிய பங்காற்றி வருகின்றன எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

## கொரோனோப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னாயத்த நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில் இன்று முதல் இந்தப் பரி சோதனைகள் யாழ் பல்கலைக்கழக மருத் துவ பீடத்தல் முதற்கட்டமாக மேற்கொள்ளப்பட உள்ள எனப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# தெற்கிலிருந்து மன்னாருக்கு வரும் லொறிகளை உயிலங்குளத்துடன் கட்டுப்படுத்த நடவடிக்கை

மன்னார்,ஏப்.03

தென் பகுதியில் இருந்து பொருள்களுடன் மன்னாருக்கு வருகின்ற லொறிகளை, மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, உயிலங்குளம், 9ஆம் கட்டை பகுதியுடன் கட்டுப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் அவசர நிலைமைகள் தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடலொன்று, மன்னார் மாவட்டச் செயலகத்தில், இன்று முற்பகல் 10.30 மணியளவில், மாவட்டச் செயலாளர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதாவது, மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், உரிய அதிகாரிகளின் வேண்டுகோளுக்கமைவாக, வெளி மாவட்டங்களில் இருந்து மன்னாருக்கு அத்தியாவசிய பொருள்களைக் கொண்டு வருபவர்களை நேரடியாக மன்னாருக்குள் நுழைய அனுமதிக்காது, மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைய, தென் பகுதியில் இருந்து பொருள்களுடன் மன்னாருக்கு வருகின்ற லொறிகள், உயிலங்குளம் - 9ஆம் கட்டை பகுதியில் உள்ள பாடசாலையில் நிறுத்தி, பின்னர் குறித்த லொறி கிருமி நீக்கம் செய்யப்பட்டும்.

பின்னர், மன்னாரில் இருந்து அழைத்துச் செல்லப்படும் பிறிதொரு சாரதியின் உதவியுடன் அந்த லொறிகள் மன்னாருக்குள் கொண்டுவரப்பட்டு, பொருள்களை வியாபார நிலையங்களுக்கு வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தச் செயற்பாடு, பிரதேச செயலாளர் மற்றும் உரிய அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நாளைமுதல் எதிர்வரும் இரண்டு வராங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலை கடித்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஊடரங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில் உணவுக்காக மைலந்தனை பிரதேசத்தைச் சேர்ந்த சிலர் குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது எதிர்பாராத நிலையில் சிறுவனை முதலை கடித்து இழுத்து சென்றதாக இவருடன் மீன்பிடிக்க சென்ற நண்பர்கள் தெரிவித்தனர்.

புணானை மைலந்தனை பகுதியைச் சேர்ந்த தியாகராஜா கஜேந்திரன் (வயது 15) எனும் சிறுவனே முதலை கடித்து மரணமடைந்துள்ளான் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

## உயிரிழந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவரும் இவரது மனைவியும் இத்தாலி நபர்களுடன் தொடர்புகளைப் பேணி வந்துள்ளதுடன், அண்மையில் இருவரும் இந்தியா சென்று நாடு திரும்பியுள்ளனர் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

உயிரிழந்த நபரின் இறுதிக் கிரியைகள் இன்றைய தினம் இடம்பெற்றன.

## தொற்றை முடக்கும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனா தொற்றை தடுக்கும் செயற்பாடுகளில் அரச புலனாய்வு பிரிவினர் நேரடி ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர் எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் நேரடி ஆலோசனைக்கமைய, இலங்கையில் முதலாவது கோவிட் - 19 நோயாளர் கண்டுபிடிக்கப்பட்ட நாளிலிருந்து அரச புலனாய்வு பிரிவு முன்னெடுத்த விசேட செயற்பாடுகளால் நாட்டில் கொரோனா பரவுவதைக் குறைக்கக் கூடியதாக உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மத்தேகொட, மாரவில, நுகேகொடை, பொரல்ல, தெஹிவளை, குளியாப்பிட்டிய, புத்தளம், பண்டாரகம, இரத்மலானை, அக்குறணை, நாத்தாண்டியா, பம்பலப்பிட்டி, வென்னப்புவ, ஜாஎல, அட்டுலுகம, வெல்லம்பிட்டி, யாழ்ப்பாணம், மருதானை ஆகிய பிரதேசங்களிலிருந்து கொரோனா தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனரென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நோயாளர் இந்தோனேசியாவுக்கு சுற்றுப்பயணம் சென்று வந்தவருடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தாரென்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

# உலருணவுப் பொதிகள் வழங்கி வைப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு சமூகப் பணிகளை மேற்கொண்டு வரும் எஸ்.கே. நாதன் அவர்களினால் இதுவரைக்கும் 7,525 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டத்தினால் நாளாந்தம் கூலித் தொழில் செய்து வாழ்ந்த குடும்பங்கள் நாளாந்த உணவுத் தேவையை பூர்த்தி செய்யமுடியாது நெருக்கடியை சந்தித்திருந்தனர். இந்த நிலையில் அவ்வாறான குடும்பங்களுக்கு அரசில் கட்சிகள் முதல் பல்வேறு அமைப்புக்கள், அரசு என பலரும் உதவிவருகின்ற நிலையில் எஸ்.கே. நாதன் என்ற தனிநபர் இதுவரைக்கும் 7,525 குடும்பங்களுக்கு ஒவ்வொன்று 900 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இருபதுக்கு மேற்பட்ட கிராமங்களுக்கு நேரடியாக சென்று இப்பொருல்கள் வழங்கப்பட்டு வருகின்றன்ச். தொடர்ச்சியாக இப் பணியை அவர் மேற்கொண்டு வருகின்றார்.

## எஞ்சிய அறுவருக்கும் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி இன்று மாலை தெரிவித்துள்ளார்.

யாழ் போதனா வைத்தியசாலையில் சந்தேகத்தில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஆறு பேருக்கு மேற்கொண்ட பரிசோதனை முடிவுகளில் அவர்களுக்கு கொரோனோ தொற்று இல்லை என்று இன்று காலையில் பணிப்பாளர் அறிவித்திரந்தார்.

அதே நேரத்தில் இன்னும் ஆறு பேருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அறிவித்திருந்தார். இந்நிலையில் அந்த ஆறு பேருக்கும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அவர்களுக்கும் கொரோனோ தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

ஆக மொத்தத்தில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்றும் இன்றும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 12 பேருக்கும் கொரோனோ தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறு கொரோனோ சந்தேகத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட ஏற்கனவே 50 பேர் வெளியாகியிருக்கின்ற நிலையில் இந்த ஆறு பேருடன் சேர்த்து இதுவரையில் 56 பேர் பரிசோதனைகளில் தொற்று இவல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டு வெளியேறியுள்ளனர்.

ஆயினும், ஒருவருக்கு மட்டும் இதுவரையில் கொரோனோ உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதே போன்று வைத்திய சாலைக்கு வெளியில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் மூவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆக மொத்தத்தில் யாழில் இதுவரையில் நான்கு பேருக்கு கொரோனோ தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## பொறுப்புணர்ந்து பணி செய்வது ஊடகங்களினதும் கடமை கூட

வரலாற்று பேரிடர் ஒன்றரை நமது நாடும் உலகமும் சந்தித்துக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பேரிடரை எதிர்கொள்ளும் போராட்டத்தில் மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்கள், படையினர் மற்றும் பாதுகாப்புத் துறையினரின் பணி மிக முக்கியமானதாகவும், பிரதானமானதாகவும் உள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை குறிப்பிடத்தக்களவில் சிறப்பானதாகவும், சிலாகித்து மெச்சத்தக்கதாகவும், போற்றுதற்குரியதாகவும் அப்பணி அமைந்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

இந்த விடயத்தில் தம்முயிரைத் துச்சமென மதித்துப் பணியாற்றும் மருத்துவர்கள், சுகாதார ஊழியர்களின் சேவை உலகம் முழுவதும் விஞ்சத் தக்கதாகப் பாராட்டிப் பேசப்படுகின்றது.

கொரோனா எனும் கொடூர வைரஸால் பீடிக்கப்பட்ட நோயாளர்களுக்கான அரும்பணியில் தேடிச் சென்று சாவு களத்துக்குள் மருத்துவப் போராட்டம் நடத்தி, பிற மனித உயிர்களை மீட்கும் அந்த அருஞ்சேவைக்கான விழுப்புண்ணாகத் தமது உயிரையே ஆகுதியாக்கி விட்ட மருத்துவர்கள், செவிலியர்கள் பற்றி எல்லாம் சமூக ஊடகங்களில் வரிசையாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

நோயாளருடன் சேர்ந்து பணியாற்றிய மருத்துவர் அதனால் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகிய நிலையில், வீட்டின் சுற்றாடலில் வந்து நின்று, தூரத்தே இருந்தபடி – கிட்ட நெருங்காமல் – தன்னுடைய கர்ப்பிணி மனைவிக்கும், இரண்டு சிறு பிள்ளைக்கும் இறுதி விடை அளித்து விட்டு, ஆஸ்பத்திரியில் போய் மரணித்த உண்மைக் கதை பற்றிய செய்தியை நமது நாளிதழிலேயே படித்து மனம் உருகிப் போயிருந்தோம்.

அத்துணைச் சிறப்புடையதாக – உயர் தெய்வீகப் பணியாக – போற்றப்படுகின்றது மருத்துவ மற்றும் சுகாதார ஊழியர்களின் அளப்பரும் சேவை.

அத்தகைய சேவையாளர் வரிசையில் இன்னொரு துறை பற்றியும் இன்று பேசப்படுகின்றது. ஊரடங்கு காலத்தில் கட்டுப்பாடில்லாமல் சேவையாற்றும் மருத்துவ, சுகாதார ஊழியர்கள், படையினர், பொலிஸாருக்கு அடுத்து அரசு விசேட அனுமதி அளித்திருக்கும் துறை ஊடகம்.

மக்களைத் தெளிவுபடுத்தி, அறிவூட்டி, விழிப்பூட்ட வேண்டிய மிகப் பொறுப்பு வாய்ந்த கடமையில் இருப்பவர்கள் ஊடகத்தினர்.

அதனால்தான் கொரோனா பேரிடருக்கு எதிராகப் போராடும் அணியில் ஊடகத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து அதற்கு விசேட அந்தஸ்து அளித்திருக்கின்றது அரசு.

அது இலங்கையில் மட்டுமல்ல, சர்வதேச ரீதியிலும் இந்த அங்கீகாரம் – மரியாதை – கௌரவ நிலை – அந்த ஊடகத்துறைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

ஊடகத்துறை அதைத் தான் பொறுப்புணர்வோடு ஆற்றுகின்றதா என்று தனக்குத் தானே சுயமதிப்பீடு செய்து கொள்ள வேண்டிய ஒரு கட்டம் – கட்டாயம் – கட்டவிழ்ந்திருப்பதாக நினைக்கின்றோம்.

இனம், மொழி, மதம், குல வேறுபாடுகளை மறந்து இந்தப் பேரிடரை நாம் எதிர்கொள்வதற்கு, அந்தத் திசையில் மக்களை வழிப்படுத்த வேண்டியவை ஊடகங்கள்தாம்.

அதை நாம் – குறிப்பாக இலங்கை ஊடகங்கள் – கவனமெடுத்து, சிரத்தை காட்டி ஆற்றுகின்றோமா என்றால் பதில் கேள்விக்குரியதாகவே – சந்தேகத்துக்குரியதாகவே – இருக்கும்.

'தவிச்ச முயல் அடிப்பது' போல, கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி குரோதங்களை வளர்த்து விடும் ஒரு வேலையை சில ஊடகங்கள் திட்டமிட்டு முன்னெடுக்கின்றன என்ற அதிர்ச்சி தரும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

சிறுபான்மை இனங்களுக்கு எதிரான பேரினவாதத்தின் உணர்ச்சிக் கொந்தளிப்பைத் தட்டி உசுப்பி விடும் வேலைகள் சில ஊடகங்களினால் நாசூக்காக முன்னெடுக்கப்படுகின்றன என்று அதிர்ச்சித் தகவல் பல மட்டங்களில் இருந்து வெளிவருகின்றன.

கொரோனா வெறும் உயிர்கொல்லி நுண்ணியிரி மட்டுமல்ல.

தீயசக்திகள் விரும்பினால் அதனை உயிரியல் ஆயுதமாகவும் கூடப் பயன்படுத்த முடியும். அத்தகைய ஆபத்துப் புதைத்த ஒரு தொற்று நோய் இது.

ஊடகங்கள் பொறுப்பற்று, இனவாதம், மதவாதம், தேசியவாதங்களை சில தரப்புகளுக்கு மட்டும் எதிரானதாக இலக்கு வைத்து பிரயோகிக்குமானால் அத்தரப்புகள் இந்த உயிரியல் ஆயுதத்தையே கையில் எடுத்துத் தங்களை உயிராயுதமாக மாற்றிக் கொள்ளும் பேராபத்து உண்டு.

சில ஊடகங்களின் பொறுப்பற்ற, இத்தகைய திமிர்தன நடவடிக்கை அவ்வாறான பேரழிவு நடவடிக்கையை நோக்கி பாதிக்கப்பட்ட தரப்புகளை நெட்டித் தள்ளிவிடும்.

ஆகவே ஊடகங்கள் பொறுப்புணர்ந்து பணியாற்ற வேண்டும்.

# சமுர்த்திக் கொடுப்பனவுகளில் பரவலாக பாரபட்சம், முறைகேடு

## பல தரப்புகளிடமிருந்தும் முறைப்பாடுகள்

– எஸ்.நிதர்ஷன் –

யாழ்ப்பாணம், ஏப். 03

அரசாங்கத்தின் சமுர்த்திக் கொடுப்பனவில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெறுகின்றன எனக் குற்றஞ்சாட்டியுள்ள சமுர்த்திப் பயனாளிகள், அதிகாரிகளின் இத்தகைய முறைகேடுகளால் தாம் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் கவலை வெளியிட்டுள்ளனர். பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளனர்.

கொரோனா தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுலப்படுத்தப்பட்டுள்ளதால் பொது மக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்கள் நாளாந்தம் பல்வேறு வகையிலும் பாதிக்கப்படுகின்றனர்.

இதனையடுத்து வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்களுக்கு அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சமுர்த்தி திட்டத்தினூடாக சமுர்த்தி உதவித் திட்டங்களை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கமைய நாடு முழுவதும் சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது.

ஆயினும் இந்த சமுர்த்திக் கொடுப்பனவில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெறுகின்றன எனவும் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். குறிப்பாக வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்கள் பலருக்கும் சமுர்த்திக் கொடுப்பனவை வழங்காமல் அரச உத்தியோகம் பெறுபவர்களுக்கும் வெளிநாடுகளில் பிள்ளைகள் உறவுகள் உள்ள வசதி படைத்தவர்களுக்கும் சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்படுவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேலும் சமுர்த்தி திட்டத்தில் உள்வாங்கப்பட்ட மக்களுக்கான சமுர்த்திக் கொடுப்பனவை வழங்குவதில் அதிகாரிகள் பாகுபாடு காட்டுகின்றனர் எனவும் அதிலும் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களை அலட்சிப்படுத்தி அலைக்கழிக்கின்றனர் எனவும் பலராலும் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக வலிகாமம் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்று அப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். அதே நேரத்தில் அங்கு சிலருக்கு வழங்கப்படுகின்ற சமுர்த்திக் கொடுப்பனவுகளும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்றடையவில்லை என்றும் வசதிபடைத்த மக்களுக்கே கிடைப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

இதே போல சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இத்தாவில் பிரதேசத்திலும் சமுர்த்திக் கொடுப்பனவில் பாரபட்சம் காட்டப்படுவதாகவும், சமுர்த்தி உதவியில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெறுகின்றன எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. இதே போன்றே வடமராட்சி கிழக்கிலும் சமுர்த்தி திட்டத்தில் முறைகேடுகள், பாகுபாடுகள் காட்டப்படுவதாக அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளிலும் சமுர்த்தி கொடுப்பனவில் முறைகேடுகள், பாரபட்சங்கள் காட்டப்படுகின்றன என மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் வழங்குகின்ற சமுர்த்தி உதவி உரிய முறையில் சென்றடையாமல் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பாதிப்புக்கள் குறித்தி பிரதேச செயலர்கள் மற்றும் அரச அதிபரிடமும் முறையிடப்பட்டுள்ளது. அத்தோடு அரச அதிபருக்கும் பலரும் கடிதங்களையும் எழுதி அனுப்பி வைத்துள்ளனர்.

# வெறிச்சோடிக் கிடக்கும் மட்டக்களப்பு





கொரோனா வைரஸின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நாட்டில் அமுல்படுத்தப்பட்டு வரும் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தொடர்ந்து தங்களது ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றார்கள்.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு நகர், ஏறாவூர், செங்கலடி, வாழைச்சேனை, ஓட்டமாவடி, காத்தான்குடி, ஆரையம்பதி, களுவாஞ்சிகுடி, கொக்கட்டிச்சோலை உள்ளிட்ட பிரதான நகரங்களில் அமைந்துள்ள பொதுச் சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளமையோடு வீதிகள் அனைத்தும் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

தனியார் மற்றும் அரச போக்குவரத்துக்கள் அனைத்தும் இடம்பெறவில்லை, வைத்தியசாலைகளில் இயங்குகின்ற போதிலும், ஒரு சிலர் மாத்திரம் சென்று மருந்துகளைப் பெற்றுக் கொண்டு செல்கின்றனர். அரச அதிகாரிகள் மக்களுக்குரிய நிவாரண சேவைகளையும், சமுர்த்திக் கொடுப்பனவுகளையும் கிராமங்களுக்குள் நேரடியாக மக்களின் காலடிக்குச் சென்று வழங்கி வருகின்றனர்.

இவற்றினைவிட மாவட்டத்திலுள்ள பிரதான வீதிகள் மற்றும் கிராமங்களிலுள்ள உள் வீதிகளுக்குள்ளும் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் மக்களுக்கு இலகுவான முறையில் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக வேண்டி பிரதேச செயலகம் மற்றும் பொலிஸாரின் அனுமதி பெற்ற வாகனங்களில் மாத்திரம் கிராமங்களுக்கு, வாகனங்களில் மரக்கறி வகைகள் விற்பனை செய்யப்படுவதோடு, விவசாய நடவடிக்கைகள், அனைத்தும் சுமூகமான முறையில் இடம்பெற்று வருகின்றன.

### நாங்கள் தீபமேற்றுவதெல்லாம் சரிதான், ஆனால்

## பொருளாதாரத் தீர்வைக் காணுங்கள் மோடிக்கு சிதம்பரம் உடன கண்டனம்

நாங்கள் தீபம் ஏற்றுகிறோம். ஆனால், நீங்கள் நாட்டில் உள்ள பொருளாதாரக் குழப்பங்களுக்கும், வேதனைகளுக்கும் தீர்வு காணுங்கள் என்று பிரதமர் மோடியின்உரைக்கு



காங்கிரஸ் மூத்த தலைவரும் முன்னாள் நிதியமைச்சருமான ப.சிதம்பரம் பதில்அளித்துள்ளார்.

ஊரடங்கால் பாதிக்கப்பட்ட ஏழைத் தொழிலாளர்களுக்கும், கூலித் தொழிலாளர்களுக்கும் 2ஆவது கட்ட பொருளாதார நிதித்தொகுப்பை பிரதமர் மோடி அறிவிப்பார் என எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தேன் என ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இந்திய மக்களுக்கு இன்று உரையாற்றிய மோடி ஏப்ரல் 5ஆம் திகதி தீபம் ஏற்றும்படி கேட்டுக்கொண்டார்.


இதுகுறித்து காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் நிதியமைச்சருமான ப.சிதம்பரம் ட்விட்டரில் பிரதமர் மோடியை கடுமையாகச் சாடியுள்ளார்.

உங்கள் பேச்சைக் கேட்கிறோம். வரும் 5 ஆம் திகதி வீட்டில் தீபம் ஏற்றுகிறோம். அதற்குப் பதிலாக நீங்கள் எங்கள் பேச்சையும், பொருளாதார வல்லுநர்கள், தொற்றுநோய் வல்லுநர்களின் நல்ல அறிவுரையையும் கவனமாகக் கேளுங்கள்.

கடந்த 25ஆம் திகதி நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்த நிதித்தொகுப்பில் ஏழைகளையும், தொழிலாளர்களையும் முற்றிலும் புறந்தள்ளிவிட்டார். ஆதலால், இன்றைய உங்கள் உரையில் ஏழைகள் வாழ்வாதாரத்துக்குத் தாராளமாக ஆதரவு அளிக்கும் 2ஆவது நிதித்தொகுப்பை அறிவிப்பீர்கள் என்று எதிர்பார்த்தோம்.

நீங்கள் சொல்லும் விளக்கேற்றும் குறியீடு முறை என்பது முக்கியம்தான். ஆனால், பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் தீவிரமான சிந்தனைகளும், நடவடிக்கைகளும் அதேயளவு சமசமான முக்கியத்துவமுள்ளவை” இவ்வாறு ப.சிதம்பரம் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சசி தரூர் தனது ருவிட்டரில் பிரமதர் மோடியின் உரையில் எதிர்காலம் குறித்த எந்தத்தொலைநோக்கும் இல்லை. கவனித்தோம்.பிரதமர் வித்தை காட்டும் மனிதன், மக்களின் வேதனைகளை, சுமைகளை, பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்கும் எந்த அறிவிப்பும் உங்கள் பேச்சில் இல்லை. ஊரடங்குக்குப் பின் வரும் பிரச்சினைகளை எவ்வாறு அடையாளம் காணப்போகிறோம் என்பதில் எந்த தொலைநோக்கும் இல்லை” எனத் தெரிவித்துள்ளார்.



## இந்தியாவில் தொற்று 2,567ஆக அதிகரிப்பு!

### 72 பேர் உயிரிழப்பு

இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 567ஆக அதிகரித்துள்ளது. 157 பேர் குணமடைந்தனர். அதேசமயம் கரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 72 ஆக அதிகரித்துள்ளது என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள் ளது.

தொற்று அடையாளம் காணப்பட்டவர்களில் 55 பேர் வெளிநாட்டவர்கள்.

இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:–

இன்று காலை 9 மணி நிலவரப்படி கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 2 ஆயிரத்து 567 ஆக அதிரித்துள்ளது. 157 பேர் பாதிப்பிலிருந்து குணமடைந்துள்ள னர். 72 பேர் உயிரிழந்துள்ளனர்.

மகாராஷ்டிர மாநிலத்தில் 16 பேர் உயிரிழந்துள்ளனர். அதைத் தொடர்ந்து குஜராத்தில் 7 பேரும், மத்தியப் பிரதேசத்தில் 6 பேரும், டெல்லி, பஞ்சாபில் தலா 4 பேரும், கர்நாடகம், தெலங்கானாவில் தலா 3 பேரும் உயிரிழந்துள்ளனர்.

ஜம் முகாஷ்மீர், உத்தரப் பிரதேசம், கேரளாவில் தலா 2 பேரும் ஆந்திரா, தமிழகம், இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தலா ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

இதில் அதிகபட்சமாக மகாராஷ்டிர மாநிலத்தில் 335 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதைத் தொடர்ந்து தமிழகத்தில் 309 பேரும், கேரளாவில் 286 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெல்லியில் 219 பேரும், ராஜஸ்தானில் 133 பேரும், ஆந் திராவில் 132 பேரும், கர்நாடகாவில் 124 பேரும் கரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் – இவ்வாறு மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## நாக்பூரிலிருந்து தமிழகத்திற்கு

### 500 கி.மீ. நடந்தே வந்த மாணவன் நிலத்தில் வீழ்ந்து துடிதுடித்து சாவு

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் படிக்கும் தமிழகத்தைச் சேர்ந்த 22 வயது மாணவர், ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு போக்குவரத்துக்கள் முடக்கப்பட்டதை அடுத்து சொந்த மாவட்டமான நாமக்கலுக்கு நடந்தே வரும்போது தெலங்கானா மாநிலம் செகந்திராபாத் அருகே சுருண்டு விழுந்து உயிரைவிட்டார்.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் வகையில் நாடு முழுவதும் 21 நாள்கள் ஊடரங்கு உத்தரவை இந்திய அரசு பிறப்பித்துள்ளது. இதனால், பள்ளிகள், கல்லூரிகள் அனைத்தும் ஏப்ரல் 14ஆம் திகதி வரை மூடப்பட்டுள்ளன.

இதனால் வேலையிழந்த லட்சக்கணக்கான தொழிலாளர்கள் தங்கள் சொந்த மாநிலத்துக்குக் குடும்பத்தினருடன் சென்று வருகின்றனர். அவர்களும் பல்வேறு இடங்களில் தடுத்து தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சூழலில் மகாராஷ்டிர மாநிலம் நாக்பூர் அருகே வர்தா எனும் இடத்தில் வேளாண் கல்லூரியில் படித்து வந்த 22 வயதான பாலசுப்பிரமணி லோகேஷ் நடந்தே வீடு திரும்பும் வழியில் உயிரிழந்தார்.

தனது நண்பர்கள் 30 பேருடன் சேர்ந்து நடைபயணமாக சொந்த ஊருக்குப் புறப்பட்டார். ஏறக்குறைய 450 கி.மீ. தொலைவை 4 நாட்கள் நடந்தே கடந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று தெலங்கானா மாநிலம் செகந்திராபாத் அருகே போவனப் பள்ளி சோதனைச் சாவடி அருகே வந்தபோது அங்கிருந்த வருவாய்த் துறையினர், பொலிஸார் அவர்களை மறித்து விசாரணை நடத்தினார்கள். அப்போது அவர்கள், நடந்து செல்லக்கூடாது, தங்குவதற்கு இடமும், உணவும் அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர்.

அப்போது திடீரென லோகேஷ் தனக்கு நெஞ்சு வலிப்பதாகக் கூறி திடீரென சுருண்டு கீழே விழுந்தார். உடனடியாக அங்கிருந்த பொலீஸார், வருவாய் அதிகாரிகள் ஆம்புலன்ஸுக்குத் தகவல் தெரிவித்து வரவழைத்தனர்.

ஆம்புலன்ஸில் ஏற்றும் முன் முதலுதவி அளிக்கப்பட்டது. எனினும் சிகிச்சை பயனளிக்காமல் லோகேஷ் உயிரிழந்தார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நேர் எண்ணங்களை மக்களிடம் சேருங்கள்

### விளையாட்டு வீரர்களுக்கு மோடி அழைப்பு

கொரோனா வைரஸ் பரவுதைத் தடுக்க ஊரடங்கு நடைமுறையில் உள்ள நிலையில் மக்களிடம் நேர் எண்ணங்களை கொண்டு சேர்க்க வேண்டும் என விளையாட்டு வீரர்களுக்கு இந்தியப் பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் நடவடிக்கை தொடர்பாக மாநில முதல்வர்கள், அரசு அதிகாரிகள், மருத்துவ துறையினர் என பல தரப்பினருடன் பிரதமர் மோடி வீடியோ கான்பரன்ஸ் வசதி மூலம் உரையாடி வருகிறார்.

காட்சி ஊடக பிரதிநிதிகள், பத்திரிகை ஆசிரியர்கள், ரேடியோ ஜாக்கிகள், நாட்டின் முன்னணி சமூக மற்றும் மத அமைப்பினர், உலகம் முழுவதும் உள்ள இந்திய தூதரகஅதிகாரிகளுடனும்பிரதமர்மோடிஉரையாற்றினார்.

இதனைத்தொடர்ந்துநாட்டின்முன்னணிவிளையாட்டு வீரர்களுடன் அவர் இன்று கலந்துரையாடினார். நாட்டின் முன்னணி விளையாட்டு வீரர்கள் 40 பேர் இதில் கலந்துகொண்டனர். இந்த ஆலோசனையில், சச்சின் டெண்டுல்கர், கங்குலி, விராட் கோலி பி.வி. சிந்து, ஹிமா தாஸ் உள்ளிட்ட நட்சத்திரங்கள் பங்கேற்றனர்.

கொரோனா வைரஸ் பரவுதைத் தடுக்க ஊரடங்கு நடைமுறையில் உள்ள நிலையில் மக்களிடம் நேர்மறையான எண்ணங்களை கொண்டு சென்று சேர்க்க வேண்டிய கட்டாயம் உள்ளது எனவும், இதில் விளையாட்டு வீரர்கள் முக்கிய பங்காற்ற முடியும் எனவும் அவர் கூறினார். இதன் மூலம் கொரோனா வைரஸை விரட்டுவதில் மக்களுக்கு தார்மீக ரீதியாக விளையாட்டு வீரர்கள் பங்களிப்பை செய்ய முடியும் என பிரதமர் மோடி கூறினார்.

### மின் விளக்குகள் அனைத்தையும் அணைத்துவிட்டு

## ஏப்ரல் 5 இந்தியாவில் அகல் விளக்கேற்றுங்கள்

### பிரதமர் மோடி அழைப்பு

*இந்திய மக்கள் அனைவரும் ஏப்ரல் 5ஆம் திகதி இரவு 9 மணிக்கு மின்விளக்குகளை அணைத்துவிட்டு அகல் விளக்குகள் மற்றும் மெழுகுவர்த்தியை ஏற்றவேண்டும் என பிரதமர் மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.*

*கொரோனா வைரசை கட்டுப்படுத்தும் வகையில் நாடு முழுவதும் கடந்த 24ஆம் திகதி முதல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் பெரும்பாலான மக்கள் வீடுகளிலேயே முடங்கி உள்ளனர்.*

இந்த நிலையில் நாட்டு மக்களிடையே பிரதமர் மோடி இன்று வீடியோ மூலம் உரையாற்றினார். அந்த வீடியோவில் அவர் பேசியதாவது:–

கொரோனாவுக்கு எதிராக நாடே ஒன்றிணைந்து போராடுகிறது. மக்கள் அனைவரும் இணைந்து கொரோனாவை கட்டுப்படுத்த முயற்சி எடுத்துள்ளீர்கள். ஊரடங்கை மதித்து நடக்கும் நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் ஊரடங்கு உலக அளவில் முன்னுதாரணமாக விளங்கியது. மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளும் உலக நாடுகளுக்கு முன்னுதாரணமாக இருக்கின்றன.

ஊரடங்கால் 130 கோடி மக்கள் வீடுகளுக்குள் இருந்தாலும் அனைவரும் ஒற்றுமையாகத்தான் இருக்கிறோம். வீட்டில் இருந்து அனைவரும் ஒன்றிணைந்தால் மட்டுமே கொரோனாவை கட்டுப்படுத்த முடியும். உற்சாகமாக இருந்து வைரசை வெற்றி கொள்ள வேண்டும்.

ஏப்ரல் 5ம் தேதி இரவு 9 மணி முதல் 9 நிமிடங்கள்



விளக்கை அணையுங்கள். மின் விளக்குகளை அணைத்துவிட்டு அகல் விளக்குகள் மற்றும் மெழுகுவர்த்தியை ஏற்றி வீடுகளில் ஒளியேற்றவேண்டும். டோர்ச், செல்போன் டோர்ச் மூலமாகவும் ஒளியேற்றலாம்.

விளக்கேற்றும்போது அமைதியாக இருந்து நாட்டு மக்கள் குறித்து சிந்தியுங்கள். வீட்டில் இருக்கும் மக்கள் அனைவரும் இறைவனின் வடிவம். இவ்வாறு அவர் பேசினார்.

# 10 லட்சம்

## கொரோனா தொற்று

### உயிரிழப்பு 50 ஆயிரத்தைத் தாண்டியது

*உலகைக் கொலைக்கூடாரமாக்கியுள்ள கொள்ளை நோயான கொரோனா வைரஸ் 10 லட்சம் பேருக்கும் அதிகமானனோருக்குத் தொற்றியுள்ளது. இன்று நண்பகல் வரையில் 10 லட்சத்து 17 ஆயிரத்து 593 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக அமெரிக்காவின் ஜோன் கொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் புள்ளவிவரங்கள் தெரிவிக்கின்றன.*

*53 ஆயிரத்து 243 பேர் உயிரிழந்திருக்கின்றனர். 2 லட்சத்து 13 ஆயிரத்து 218 பேர் குணமடைந்துள்ளனர். 7 லட்சத்து 51 ஆயிரத்து 218 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 37 ஆயிரத்து 687 பேரின் நிலமை கவலைக்கிடமாக இருக்கின்றது.*

*உலகம் முழுவதும் 204 நாடுகள் மற்றும் தன்னாட்சி நிலங்களில் நோய் தொற்றியுள்ளது. இரு உல்லாச பணிகள் கப்பல்களிலும் தொற்று ஏற்பட்டுள்ளது.*

*அமெரிக்காவில் 2 லட்சத்து 45 ஆயிரம் பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. அங்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 6 ஆயிரத்து 95 ஆக உயர்ந்துள்ளது.*

*இத்தாலியில் 1 லட்சத்து 15 ஆயிரம் பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. உலகிலேயே ஆகக் கூடுதலான உயிரிழப்புக்கள் இங்கே நிகழ்ந்துள்ளன. 13 ஆயிரத்து 915 பேர் இறந்துள்ளனர்.*

*இத்தாலியில் உயிரிழப்பு உயர்ந்து வருகின்றபோதும் நோய்ப் பரவல் வீதம் அங்கு குறையத் தொடங்கியுள்ளது. நேற்று தொற்று அதிகரிப்பு 3.1 சதவீதமாகப் பதிவாகியிருந்தது. இது அதற்கு முதல் நாளில் பதிவான 3.8 சதவீதத்ததை விடக் குறைவானதாகும். எனினும் அதே காலப் பகுதியில் உயிரிழப்பு 727 இலிருந்து 760 ஆக உயர்ந்துள்ளது.*

*இத்தாலிக்கு அடுத்து உயிரிழப்பு எண்ணிக்கையில் ஸ்பெயின் முன்னணியில் உள்ளது. அங்கு 10 ஆயிரத்து 348 பேர் உயிரிழந்திருக்கின்றனர். 1 லட்சத்து 12 ஆயிரத்து 65 பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது.*

*பிரான்ஸில் 5 ஆயிரத்து 387 பேரும் சீனாவில் 3 ஆயிரத்து 222 பேரும் ஈரானில் 3 ஆயிரத்து 160 பேரும் பிரிட்டனில் 2 ஆயிரத்து 921 பேரும் ஜேர்டுமனியில் ஆயிரத்து 107 பேரும் நெதர்லாண்டில் ஆயிரத்து 339 பேரும் பெல்ஜியத்தில் ஆயிரத்து 11 பேரும் உயிரிழந்துள்ளனர்.*

# ஊரடங்கை மீறி நடந்தால் சுட்டுக் கொல்லப்படுவீர்

## பிலிப்பைன்ஸ் அதிபர் கண்டிப்பான உத்தரவு

பிலிப்பைன்ஸில் ஊரடங்கு உத்தரவை மீறுபவர்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள் என்று அந்த நாட்டு அதிபர் ரோட்ரிகோ டுத்தார்த்தே தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த உலகின் பல நாடுகளும் ஊரடங்கு உத்தரவை நடைமுறைப்படுத்தியுள்ளன. பிலிப்பைன்ஸூம் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அதனை மீறுபவர்கள் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் சுட்டுத் தள்ளப்படுவார்கள் என்று அதிபர் எச்சரித்தார். .

ஊரடங்கு உத்தரவைக் கடுமையாக கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் பொதுமக்களிடம் வலியுறுத்தினார். .

பிலிப்பைன்ஸில் 2 ஆயிரத்து 633 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். 100க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர்.

போதைப் பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக கடத்தல் சந்தேகநபர்களைச் சுட்டுக் கொல்லும் சர்ச்சைக்குரிய உத்தரவைச் செயற்படுத்தியவர் டுத்தார்தோ. பல நாடுகளும் அவரது அந்த நடவடிக்கையைக் கண்டித்தாலும் கடத்தல்காரர்களைச் சுட்டுக்கொன்று போதைப் பொருள் விற்பனை நெருக்கடிக்கு அவர் ஒரு முடிவு கட்டினார்.

இதனால் ஊரடங்கு தொடர்பான அவரது அறிவிப்பும் மக்களிடையே கிலியைக் கிளப்பியுள்ளது.

# ஐரோப்பாவில் இறந்தோரில் 95 வீதமானோர் வயோதிபர்

கொரோனா தொற்று காரணமாக ஐரோப்பாவில் இறந்தவர்களில் 95 சதவீதம் பேர் 60 வயதைக் கடந்தவர்கள் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வியாழக்கிழமை உலக சுகாதார அமைப்பு தெரிவித்ததாவது:-

ஐரோப்பாவில் கொரோனா வைரஸ் தொற்றால் இறந்தவர்களில் 95 சதவீதம் பேர் 60 வயதைக் கடந்தவர்கள். கொரோனா வைரஸ் வயதானவர்களுக்கு மட்டும்தான் உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கும் என்பது தவறு. 50 வயதுக் குட்டபட்ட 10 முதல் 15 சதவீதம் பேருக்கும் கொரோனா வைரஸால் மிதமான பாதிப்பு ஏற்படுகிறது.

ஐரோப்பாவில் இதுவரையில் 30 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். பாதிக்கப்பட்டவர்களில் அரைவாசிப் பேரும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

சீனாவின் வுஹான் நகரில் உருவான கரோனா வைரஸ் இதுவரையில் 203 நாடுகள் மற்றும் தன்னாட்சி நிலங்களில் தனது கைவரிசையைக் காட்டியுள்ளது.

# கொரோனா போராட்டத்திற்கு உலக வங்கி 1.9 பில். நிதி உதவி

## இந்தியாவிற்கே அதிக பங்கு வழங்கப்படுகிறது

கொரோனா வைரஸ் போராட்டத்தில் உதவுவதற்காக 25 நாடுகளுக்கு 1.9 பில்லியன் டொலர் நிதி உதவி வழங்கப்படவுள்ளதாக உலக வங்கி அறிவித்துள்ளது. இதன் முதல் பயனாளியாக இந்தியா தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 40 நாடுகளுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்றும் அது தெரிவித்துள்ளது.

முதற்கட்ட நிதி உதவியில் பெருமளவு நிதியான 1 பில்லியன் டொலர் இந்தியாவிற்கே வழங்கப்படுகின்றது. ஆட்களைச் சோதிப்பது, தொற்று ஏற்பட்டிருக்கக்கூடியவர்களைப் பற்றிய தடமறிவது மற்றும் ஆய்வகப் பரிசோதனை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக இந்த நிதி உதவி வழங்கப்படுவதாக உலக வங்கி தெரிவித்தது.

கொரோனா நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கான பாதுகாப்புக் கவச உடைகளைக் கொள்வனவு செய்வது, தனியான மருத்துவ விடுதிகளை உருவாக்குவது ஆகியவற்றுக்கும் இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

ஒவ்வொரு கண்டத்திலும் உள்ள நாடுகளுக்கு இந்த உதவி சென்று சேர்கின்றது என்று உலக வங்கி தெரிவித்துள்ளது. தெற்காசியாவில் பாகிஸ்தானுக்கு 200 மில்லியன் டொலரும் ஆப்கானிஸ்தானுக்கு 100 மில்லியன் டொலரும் வழங்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக உலக வங்கியிடம் தற்போதுள்ள 1.7 பில்லியன் நிதியை மீண்டும் பயன்படுத்த உள்ளதாகவும் அடுத்து வரும் 15 மாதங்களில் மேலும் 160 பில்லியன் டொலரை கொரோனா போராட்டத்திற்காகச் செலவிடவுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

# ஆப்கான் மக்களின் விருப்பங்களில் இந்தியா தலையிடக்கூடாது - தலிபான்

ஆப்பானிஸ்தானின் உண்மையான விருப்பங்களில் இந்தியா தலையிடக்கூடாது என்று தெரிவித்திருக்கிறது தலிபான் அமைப்பு. அதன் அரசியல் செய்டுதித் தொடர்பாளர் சுஹைல் ஙஹீன் இதனைத் தெரிவித்தார்.

ஏப்ரல் முதலாம் திகதி இந்திய மத்திய அயலுறவு அமைச்சகம் விடுத்த அறிக்கை ஒன்றில் இந்தியா எப்போதும் ஆப்கான் தலைமை, ஆப்கானுக்கேயுரிய, ஆப்கன் கட்டுப்பாட்டு நடைமுறைகளுடன் கூடிய அமைதியை ஆதரித்து வருகிறது. இதன் மூலமே வெளியிலிருந்து அனுசரணை வழங்கப்படும் பயங்கரவாதத்திலிருந்து மீள முடியும் என்று கூறியிருந்தது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த சுஹைல், ஆப்கானிஸ்தானில் வெளியிலிருந்து அனுசரணை வழங்கப்படும் பயங்கரவாதம் ஏதுமில்லை என்று தெரிவித்தார்.

ஒருபுறம் ஆப்கான் மக்களும் இஸ்லாமிக் எமிரேட் ஆஃப் ஆப்கானிஸ்தான் (தலிபான் தன்னை இந்தப் பெயரால்தான் அழைக்கிறது) என்ற விடுதலை இயக்கத்தினரும் நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடுகின்றனர். இன்னொருபுறம் ஆக்கிரப்புப் படைகள். இது தான் ஆப்பாகினின் நிலைமை.

பிரிட்டனின் அடிமைத்தனத்தில் இருந்து இந்திய மக்கள் போராடிச் சுதந்திரம் பெற்ற பிரகாசமான வரலாறு இருக்கின்றது. எனவே உள்நாட்டு விடுதலை இயக்கங்கள் மீது பயங்கரவாதம் என்ற சாயத்தை இந்தியா பூசக்கூடாது - என்று தெரிவித்தார் சுசஹைல்

சென்னையில் இருந்து வெளிவரும் தி இந்து ஆங்கிலப் பத்திரிகைக்கு மின்னஞ்சல் மூலம் சுஹைல் செவ்வி வழங்கியிருந்தார். அந்தச் செவ்வியில் இந்திய மத்திய அயலுறவுத்துறை அமைச்சின் கூற்றுக்களையும் அவர் மறுத்தார்.

அந்த அறிக்கையில் உள்ள வாசகங்களை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. "ஆப்கான் தலைமை, ஆப்கானுக்கேயுரிய" போன்ற வாசகங்கள் காபூலில் உள்ள தலைமையைக் குறிப்பதாக உள்ளன.

அமெரிக்காவுடன் கையெழுத்திட்ட அமைதி ஒப்பந்தத்தின் படி நாங்கள் ஆப்கானுக்கு உள்ளேயே இருக்கும் அமைப்புகளுடன் பேச்சு நடத்துவோம். இந்த உள் ஆப்கான் அமைப்புகள் காபூல் தலைமை நிர்வாகத்தினால் வழிநடத்தப்படுபவை அல்ல . ஆகவே ஆப்கான் மக்களின் உண்மையான விருப்பங்களில் இந்தியா தலையிடுவது சரியாக இருக்காது - என்றார் அவர்.

கடந்த மாதம் ஆப்கானிஸ்தானில் உள்ள சீக்கியர்களின் மதத் தலமான குருத்துவாராவின் மீது இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலைத் தமது அமைப்பு கடுமையாகக் கண்டித்தது என்றும் அவர் தெரிவித்தார்.

# கொரோனாவின் அச்சுறுத்தலும் மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியும்!



வி.பி.சிவநாதன்
(பொருளியல் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

இன்று நாம் எங்கு நிற்கிறோம், எங்கே போகப்போகிறோம்? – இன்றைய நெருக்கடிக்குள் இதுபற்றி சிந்திப்பதும் செயற்டுவதும் மிக அவசியமானது.

தேசிய பொருளாதாரக் கொள்கையின் கீழான அரசாங்கத்தின் பொருளாதார அமுலாக்கல் இலங்கையின் வெவ்வேறு பிரதேசங்களில் நெருக்கடி நிலைக்கேற்ப வேறுபட்டுக் காணப்படுகிறது.

நாளாந்த வாழ்வுக்கான உணவும், அதன்கிடைப்பு நிலையும், அதன் விநியோக மையங்களும் சுறுசுறுப்பாக இயங்கினாலும் அதை கொள்வனவு செய்யும் நுகர்வோரது கொடுக்கல் வாங்கலுக்கான பணமும், அதன் கிடைப்பு நிலையும் பல குழப்பங்களை ஏற்படுத்தியிருப்பதை பத்திரிகைகள் வாயிலாக அறியமுடிகின்றது.

அவரவர் தொழில் நிலைகளுக்கேற்ப நாளாந்த, மாதாந்த வருமான வேறபாடுகள் வாழ்கைமுறை வேறுபாடுகளையும், வாழ்க்கைத்தர வேறுபாடுகளையும் குறிப்பிட்ட ஒரு கிராமத்திலோ அல்லது பிரதேசத்திலோ காணக்கூடியதாகவுள்ளது. இங்கு எல்லா மக்களதும் நாளாந்த வாழ்வை தீர்மானிக்கும் காரணிகளை இன்றைய காலகட்டத்தில் பிரித்தறிவதற்கான வாய்ப்பு அதிகமாகவுள்ளது.

அன்றாட உணவும் அடுத்த வேளைக்கான உணவும் நிச்சயப்படுத்தப்படுவதே வாழ்வின் முதல் இலக்காக இருக்கும் குடும்பங்களின் வாழ்க்கை எக்காலத்திலும் நிச்சயமற்றதொன்றாக இருப்பது இயல்பானதொன்று.

இது நாடுகளின் பொருளாதாரத்தில் தொடர்ந்திருப்பது ஆரோக்கியமானதல்ல. உறுதியான பொருளாதாரக் கட்டமைப்பொன்றினூடாக இந்நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். அதுவே பொருளாதார நீதி.

இந்நெருக்கடி நிலையில் நுகர்வோர் தெரிவுக்கு சந்தர்ப்பமில்லாததோடு நுகர்வோர் தெரிவை சாதகமாக்கிக் கொள்ளும் உற்பத்தியாளருக்கும், உற்பத்தி செய்யும் சந்தர்ப்பத்தையும் மறுப்பதாக அமைந்து விடுகிறது.

இது நெருக்கடிக்கால அரச கட்டளைப் பொருளாதாரமாக மாறியிருக்கிறது. இது தவிர்க முடியாததாக இருக்கிறது. இந்நிலை தொடர்ந்தால் மக்கள் ஜனநாயகத்தில் மக்களின் அடிப்படை மனித உரிமை மறுப்பாக அமைந்துவிடும்.

இதுவே வினைத்திறனற்ற பொருளாதார நடத்தைக்கு வழிசமைத்துவிடும். இது ஒரு அவசர கால நிலையில் மக்களின் அடிப்படைத் தேவையை நிறைவு செய்வதற்காக எடுக்கப்பட்ட தற்காலிக ஏற்பாடாயின் இயல்பு நிலைக்கு திரும்பும்போது பழைய நிலைக்கு பொருளாதாரச் செயற்பாடுகள் வருவது என்பது இலகுவானதொன்றல்ல.

எல்லா செயற்பாடும் புதியவடிவம் பெறக்கூடிய சந்தர்ப்த்திற்கான வாய்ப்பே அதிகம் உண்டு. இத்தகைய சூழலில் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் பங்கீட்டு போக்குவரத்து சார்பாக தோற்றம் பெறும் வேலைவாய்ப்பும் நிறுவன ரீதியாக அல்லாமல் தேவைக்கு ஏற்றவகையில் உருவாகும் சந்தர்ப்பங்களே உண்டு.

இதனால் கூலி சம்பளங்கள் உரியளவில் இல்லாமல் அன்றாட சூழ்நிலைக்கேற்பதாக வழங்குவதாக அமைந்துவிடும். அரசாங்கம் தனது கூலிக் கொள்கையை வலியுறுத்தினாலும் முறைசாராததும் நிறுவன ரீதியற்றதுமான தொழில்களில் தொழிலாளர் உறுதியான கூலியையோ, சம்பளத்தையோ பெறமுடியாது.



பலசந்தர்ப்பங்களில் தொழில்கள் நடைபெறுவதற்கான சூழ்நிலை இல்லையென குறிப்பிட்டு வேலைவாய்பு இல்லையென திருப்பி அனுப்பப்படும் சூழ்நிலையே அதிகம் காணப்படும். இதனால் தொழில் வாய்பை இழந்த தொழிலாளிக் குடும்பங்கள் வறுமைக்குள் தள்ளப்படுவதையே காணக்கூடியதாகவுள்ளது.

இம்மக்களது பிரச்சினையைத்தீர்க்க நிவாரணங் கள் வழங்கி அவர்களைத் தங்கி வாழ்வோராக அடையாளப்படுத்துவதே இறுதித்தீர்வாக அமைந்து விடுகின்றது.

சீராக கட்டமைக்கப்பட்ட பொருளாதாரங்களில் சாதாரண நிலைகளில் தொழிலாளர்களுக்கான காப்புறுதி திட்டங்களுடாக வேலை தேடும் காலங்களிலும் இடர்காலத்திலும் காப்புறுதி வருமானத்தைப் பெறக்கூடியதான ஏற்பாடுகள் இருப்பதால் தொழிலாளர் சமூகத்தில் கௌரவமாக நடாத்தப்படுவதோடு தங்கியிருப்போர் என்ற வகைப்படுத்தலிருந்தும் விடுபடுகின்றனர்.

தனியார்துறை நிறுவனங்கள் பல சமயாசமய தொழில்வாய்ப்பினை வழங்கி இச்சிக்கலில் இருந்து விலகிச் செல்கின்றன. இது வறுமையையும் பட்டினிச்சாவையும் எற்படுத்திவிடும்.

ஏற்கனவே சேமிப்பை வைத்திருப்பவர்களும் சொத்து உடையவர்களும் இன்றைய பேரிடரிலிருந்து தப்பினாலும் இது தற்காலிகமானதே. கொரோனாவின் தாக்கத்தால் உலகப்பொருளாதாரமே ஈடாடிக்கொண்டிருப்பதால் உலகின் பலதொழில்துறைகள் மூடவேண்டிய கட்டத்திற்கு வந்துள்ளதை அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணக்கூடியதாக உள்ளது.

கப்பல் சேவைகள், விமான சேவைகள், வங்கிச் சேவைகள், வர்த்தக சேவைகள் முடங்கிப்போகும் சூழ்நிலை காணப்படுகிறது.

இதனால் இறக்குமதி, ஏற்றுமதி மந்தமடைவதோடு உலகின் உற்பத்திமட்டங்களிலும் வீழ்ச்சி காணப்படும். இது உலகின் வர்த்தகத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதால் இலங்கை போன்ற சிறிய நாடுகளால் இவ்வாறான சவால்களை எவ்வாறு எதிர்கொள்ளமுடியும் என்பது விடைகாண முடியாததொன்றாக இருக்கும். அரசியல் வாதிகளாலும் விடைசொல்ல முடியாது என்பதே யதார்த்தம்.

கொடிய நோய்த் தொற்றிலிருந்தும் அதிகளவான இறப்பிலிருந்தும் மக்களைக் காப்பாற்றும் முக்கிய கடமையை செய்துவரும் அரசாங்கம் மக்களிற்கான உணவை வழங்கி பட்டினிச்சாவிலிருந்து காப்பாற்றும் பாரிய பணியின் மத்தியில் மக்களை உற்பத்தியில் ஈடுபட வைப்பதும் பொரும் சவாலாக உள்ளது. இருந்தபோதும் வறிய நாடுகள் தமது பாரம்பரிய தொழில்நுட்பத்துடனான பிழைப்பூதிய உற்பத்திமுறைக்கு திரும்பவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றது.

விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில், குடிசைக் கைத்தொழில், கால்நடைவளர்ப்பு, உணவுபதனிடுதல் போன்ற குடும்ப தொழில்களில் புத்தாக்க செய்முறைகளையும் (Invention, innovation, value addition) பெறுமதிசேர் உற்பத்தி நுட்பங்களையும் புகுத்தி விரைவான பொருளாதார செயற்பாட்டில் ஈடுபட வேண்டியது மிக அவசியமானது.

எப்படி எம்முன்னோர்கள் கொள்ளை, கோதாரி, கொலரா போன்ற போக்கறுந்து போகும் நோய்களிலிருந்தும் பிரதேச ரீதியான பொருளாதாரத் தடையிலிருந்தும் தப்பிப்பிழைத்து வந்தனரோ அதேபோல் இன்று நாமும் தப்பிப்பிழைக்கும் survival economy பொருளாதார முறைக்கூடாக தற்சார்பு நிலையில் சுயம்சார்ந்து வாழ்வதே இந்நெருக்கடிக்கு தீர்வாக அமையும்.

இதற்கு மக்கள் அனைவரும் தங்களைத் தயார்ப்படுத்த வேண்டும். தமிழர்களாகிய எமக்கு இது புதிதல்ல. எங்கள் வாழ்வியல் வடிவமே இதுதான்.

பழைய உற்பத்தி நுட்பத்தை நிலம், நீர், கடல், விலங்கு வேளாண்மை, தொழில்களில் உச்சவளப் பயன்பாட்டைத் தரக்கூடிய வகையில் மாற்றி அமைத்து தற்சார்பு நிலையில் அதாவது புதிய முறையில் யாரிடமும் தங்கி நிற்காது பழைய பிழைப்பூதிய நிலைக்கு திரும்பவும் செல்லாமல், புதியதும், உறுதியானது மன மாற்று வழிமுறை ஒன்றைத் தெரிவு செய்வதே இன்றைய சவாலை எதிர்கொள்ள நாம் முன்வைக்கும் முன்மொழிவுகளாகும்.

எங்கள் பாரம்பரிய உற்பத்தி நுட்பத்தில் மனித உழைப்பு முக்கியமானது. குறிப்பாக குடும்ப உழைப்பின் பயன்பாட்டில் குடும்பத்தில் உள்ள சகலரும் வயது மற்றும் அனுபவ வேறுபாடுகளுக்கேற்ப தங்கள் பங்களிப்பை வழங்குவர். இதில் பெண்கள், சிறு+வர்களும் உள்ளடங்குவர். இங்கு செயற்படாத உழைப்பைக் காணமுடியாது.

நவதாராளமய பெருளாதாரத்தில் உட்புகுந்த முதலீடு, இலாபம், வட்டிக்கடன், நுண்நிதி கடன் அட்டை, சிறிய நடுத்தர கைத்தொழில் முதலீடுகள், வெளிநாட்டு நேரடி முதலீடுகள், பல்தேசியக் கம்பனிகளின் வர்தக நடவடிக்கைகள், கடன் அட்டை போன்றவை பொருளாதாரத்தை விரைவுபடுத்தியது.

இச்செயற்பாட்டில் மாட்டிக்கொண்ட வறிய நாடுகளின் மக்கள் படும் அவலங்கள், துன்பங்கள் அளவிடமுடியாததொன்றாக இருப்பது இன்று காணக்கூடியதாகவுள்ளது.

கொரோனா வைரஸுக்குள் சிக்கித்தவிக்கும் மக்கள் தாங்களே தங்களைக் காப்பாற்ற வழிமுறைகளைத் தேடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

எப்படி எம்முன்னோர்கள் கொள்ளை, கோதாரி, கொலரா போன்ற போக்கறுந்து போகும் நோய்களிலிருந்தும் பிரதேச ரீதியான பொருளாதாரத் தடையிலிருந்தும் தப்பிப்பிழைத்து வந்தனரோ அதேபோல் இன்று நாமும் தப்பிப்பிழைக்கும் survival economy பொருளாதார முறைக்கூடாக தற்சார்பு நிலையில் சுயம்சார்ந்து வாழ்வதே இந்நெருக்கடிக்கு தீர்வாக அமையும்.

# கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களின் இறுதிச்சடங்கில் ஒன்று கூடினால் நடவடிக்கை!

## பொலிஸ் தரப்பு எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.03

கொவிட் 19 வைரசு தொற்றினால் உயிரிழந்தால் அந்த நபரின் இறுதி சடங்கிற்காக சடலத்தை எடுத்து செல்லும் பிரதேசங்களில் பொது மக்கள் ஒன்றுகூடுவார்களாயின் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொவிட் 19 பரவுவதை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இதனை அவர் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொவிட் 19 வைரஸ் தொற்று நோயாளர்களை வீடுகளில் வைத்து சிகிச்சை செய்யும் விடயம் தெரிய வந்துள்ளது.

அவசர நோய் நிலமை ஏற்பட்டால் எத்தகைய வாகனங்களிலும் செல்ல முடியும். இதற்கு ஊரடங்கு சட்ட அனுமதி பத்திரம் தேவையில்லை.

பொலிஸாரினால் வழங்கப்படும் ஊரடங்கு சட்ட அனுமதிப்பத்திரம் முறைகேடாக பயன்படுத்தப்படுவதாகத் தகவல் கிடைத்துள்ளது. இது தொடர்பாக புலனாய்வு பிரிவைப் பயன்படுத்தி விசாரணை மேற்கொள்ளப்படும். இதே போன்று அவசரகால அனுமதி பத்திரம் பெற்றுக் கொள்



வதற்காகப் போலி ஆவணம் சமர்ப்பிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கொவிட் வைரஸ் தொற்றினால் யாராவது உயிரிழந்தால் அந்த நபரின் இறுதி சடங்கிற்காக சடலத்தை எடுத்து செல்லும் பிரதேசங்களில் பொதுமக்கள் ஒன்றுகூடுகின்றனர் எனத் தெரியவந்துள்ளது. இதற்குப் பின்னர் மக்கள் ஒன்றுகூடுவார்களாயின் அவர்களுக்கு எதிராக தொற்று நோய் தடுப்பு சட்டத்தைப் போன்றே இலங்கையில் உள்ள சட்ட விதிகளுக்கு அமைவாகத் தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். - என்றார்.

# அரியாலை பூம்புகார் கிராமத்தில் இன்று கிருமித் தொற்றுநீக்கி விசிறும் நடவடிக்கை





யாழ்ப்பாணம் அரியாலையில் வசிக்கும் பெண்மணி ஒருவர் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்ட நிலையில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டார் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இதன் காரணமாக அரியாலை பூம்புகார் கிராமத்தில் கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணி இன்று காலை முன்னெடுக்கப்பட்டது.

சிறப்பு அதிரடிப் படையினர் இந்தப் பணியை முன்னெடுத்திருந்தனர். கோரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர் வசிக்கும் வீடு உள்ள பூம்புகார் கிராமத்தில் சுவிஸ் போதகரின் ஆராதனையில் பங்கேற்ற 18 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார் கண்காணித்து வருகின்றனர்.

# ஊரடங்கில் மதுச்சாலையை சூறையாடி ஏப்பமிட்ட கும்பல்



## டிக்கோயா புளியாவத்தையில் சம்பவம்



நேற்று அதிகாலை ஊரடங்கு சட்டம் நடைமுறையில் இருந்த வேளையில் நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா புளியாவத்தை நகர பகுதியில் உள்ள மதுபானச்சாலை ஒன்று இனந்தெரியாதவர்களால் உடைக்கப்பட்டு ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான மதுபான போத்தல்கள் சூறையாடப்பட்டுள்ளன என்று நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

சாஞ்சிமலை ஹட்டன் பிரதான வீதியின் புளியாவத்தை நகரில் உள்ள மதுபானசாலையின் முன்கதவு திறக்கப்பட்டு இருந்ததை அவதானித்த நகரப்பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் மதுபானசாலையின் உரிமையாளருக்கு அறிவித்ததை அடுத்து உரிமையாளரினால் நோர்வுட் பொலிஸாருக்கு அறிவிக்கபட்டது. அதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யபடவில்லையெனப் பொலிஸார. தெரிவித்தனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.






# கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு இலங்கைக்கு ரூ.2,400 கோடி ஒதுக்கீடு

## உலக வங்கி வழங்குகின்றது

கொழும்பு,ஏப்.03

கொரோனா வைரஸிற்கு எதிரான தடுப்பு பணிகளுக்காக இலங்கைக்கு 12 கோடி 86 லட்சம் டொலர்களை (சுமார் 2ஆயிரத்து 400 கோடி ரூபா) உலக வங்கி ஒதுக்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகெங்கிலும் வளரும் நாடுகளுக்கான முதல் அவசர உதவி நடவடிக்கைகளுக்கு உலக வங்கியின் நிர்வாக இயக்குநர்கள் குழு இந்நத ஒப்புதலை அளித்துள்ளது.

முதல் குழு திட்டங்கள், 190 கோடி டொலராக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் 25 நாடுகளுக்கு அது உதவும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அவசர நிதி உதவியின் மிகப் பெரிய பகுதி இந்தியாவுக்கு சென்றுள்ளது.

அதாவது நூறு கோடி அமெரிக்க டொலர், கொரோனாவிற்கு எதிராகப் போராடி வரும் இந்தியாவிற்கு தடுப்பு பணிகளுக்காக நிதியுதவியாக வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இது, சிறந்த திரையிடல்(கண்டறிதல்), தொடர்பு தடமறிதல், ஆய்வக கண்டறிதல், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை வாங்குவது, புதிய தனிமை வார்டுகளை அமைக்க போன்றவற்றிற்கு என்று உலக வங்கி கூறியுள்ளது.

தெற்காசியாவில், உலக வங்கி பாகிஸ்தானுக்கு 20 கோடி அமெரிக்க டொலர்களும், ஆப்கானிஸ்தானுக்கு 10 கோடி அமெரிக்க டொலர்களும், மாலத்தீவுக்கு 73 லட்சம் அமெரிக்க டொலர்களும், இலங்கைக்கு 12கோடி 86 லட்சம் அமெரிக்க டொலர்களும் ஒப்புதல் அளித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

# அனைத்து தனிமைப்படுத்தல் முகாம்களும் வவுனியா மாவட்டத்தில் இன்றுடன் காலி

## கடைசி வெளிநாட்டுப் பயணிகள் அணியும் வெளியேறியது





வவுனியா,ஏப்.03

வவுனியா பெரியகட்டு இராணுவ முகாமில் அமைந்துள்ள கொரனா பரிசோதனை தடுப்பு தனிமைப்படுத்தல் முகாமிலிருந்து எஞ்சிய 16 விமான பயணிகளும் இன்று விடுவிக்கப்பட்டனர்.

கொரோனோ வைரஸ் தாக்கம் நாட்டில் இனம் காணப்பட்ட நிலையில் வெளிநாட்டிலிருந்து வருகைதரும் பயணிகள் 14 நாள்கள் தனிமைப்படுத்தி பரிசோதனைக்குட்படுத்தப்படுவார்கள் என்று அரசு அறிவித்திருந்தது.

அந்தவகையில் வவுனியா பெரியகட்டு இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரிசோதனை தடுப்பு தனிமைப்படுத்தல் முகாமுக்கு விமான பயணிகள் கொண்டு வரப்பட்டிருந்தனர். இத்தாலி, லண்டன்,கனடா தென் கொரியா,ஈரான் நாட்டவர்கள் இந்த முகாமிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தமையுடன் 14 நாள்கள் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டு கொரோனா தொற்று உள்ளதா என்ற பரிசோதனைக்குட்படுத்தப்பட்டிருந்தனர்.



இந்நிலையில் இந்த முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த 16பேர் இன்று வன்னி கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் ரோகித தர்மசிறி தலைமையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் கனடா, லண்டன் ஆகிய நாடுகளில் இருந்து வருகை தந்திருந்தனர். அவர்களுக்கு நோய்த்தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அவர்கள் தத்தமது வதிவிடங்களுக்குச் செல்ல அனுமதிக்கபட்டனர்.

வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த அனைத்து தனிமைப்படுத்தல் முகாமில் இருந்தும் அனைத்து விமானப் பயணிகளும் வைத்திய பரிசோதனை முடிந்து வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கட்டார் தீ விபத்தில் இலங்கைப் பெண் உயிரிழந்தார்

கட்டார் நாட்டுக்குத் தொழில் நிமித்தம் சென்றிருந்த பெண்ணொருவர், அங்கு ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளாரென, அந்நாட்டு தூதரகம் தெரிவித்துள்ளது.

அல்கோர் நகரிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்தபோதே, இந்தப் பெண் தீ விபத்தில் சிக்கியுள்ளார்.

இந்தப் பெண் நீண்ட காலமாக கட்டாரில் பணியாற்றி வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த தீ விபத்தில் சிக்கி மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்.

# ஒய்வூதியத்துக்காக வாங்கி கிளைகள் திங்களன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஏப்.03

ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்காக நேற்றும் இன்றும் திறந்திருந்த வடக்கு வங்கிக் கிளைகள் இனி அதற்காக திங்கள் கிழமை திறந்திருக்கும் என வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது

நேற்று, இன்றோடு ,நாளை சனிக்கிழமையும் வங்கிகள் இதற்காகத் திறந்திருக்கும் என முன்னர் வெளிவந்த செய்தி தவறு என்றும் நாளைக்குப் பதிலாக இப்பணிக்காகத் திங்களன்று வடக்கு வங்கிகள் திறந்திருக்கும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

# இன்று மதியம் வரை ஊரடங்கை மீறிய 11,019 பேர் கைது

கொழும்பு,ஏப்.03

இன்றுமதியம்12மணியுடன்நிறைவடைந்த கடந்த ஆறு மணித்தியாலங்களில் ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் 289 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி இதுவரை நாடுமுழுவதும் 11,019 பேர் ஊரடங்கு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் 2727 வாகனங்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikathir

அரண்மனை




தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

நாளைய (04/04/2020) தலைப்பு
அரண்மனை

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

## சிக்கன நடைமுறையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்




செலவுச் சிக்கன நடைமுறைகளை அமுலாக்குவதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன் கீழ், பணியாளர்களுக்கான சம்பள வெட்டும் அடங்கும்.

எதிர்வரும் மூன்று மாதங்களில் சம்பளக் கொடுப்பனவுகளை இரண்டரை முதல் 25 சதவீதம் குறைத்து, சம்பள அதிகரிப்புகளை இடைநிறுத்தும் யோசனைகள் அமுலாக்கப்படும் என ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது நாட்டின் பொருளாதாரம் குறித்தும், பணியாளர்களின் வாழ்வதாரம் குறித்தும் கவனம் செலுத்தி, இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

## 2,000 கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்க வசதிகள் இங்கு தயார்

கொழும்பு,ஏப்ரல்03

*இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகும், 2000 நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கக் கூடிய அனைத்து வசதிகளும் தயார் நிலையில் உள்ளன என சுகாதார சேவை பிரிவு தெரிவித்துள்ளது.*

*அடுத்து வரும் வாரங்களில் ஏற்படப் போகும் நிலைமையை கருத்திற் கொண்டு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.*

நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நோய் பரவலை கணக்கிட்டு இந்த எண்ணிக்கை மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி இலங்கையில் காணப்பட்ட நிலைமைக்கமைய ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி வரையில் நோயாளிகளின் எண்ணிக்கை 165 ஆக அதிகரிக்கும் என்றும், ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி அளவில் நோயாளிகளின் எண்ணிக்கை 340ஐ பதிவு செய்யும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



## தேர்தலை நடத்தி முடிப்பதில் அரசு விடாப்பிடி! கோடி காட்டுகின்றார் கோட்டாவின் ஆலோசகர்

கொழும்பு,ஏப்.03

நாடாளுமன்றத் தேர்தலை எப்படியாவது நடத்து முடித்து விடவேண்டும் என்பதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியாக இருப்பதனாலேயே, நாடாளுமன்றத்தைக் கூட்டுவதில் அவர் அக்கறை காண்பிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

1988ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் ஜே.வி.பியின் கிளர்ச்சி இருக்கும்போதே தேர்தல்கள் இடம்பெற்றன. அதேபோன்று இப்போதும் தேர்தல்கள் நடத்தலாம் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசகர்களில் ஒருவரும் நேற்றைய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்றவருமான சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் முடிந்த பின்னர், ஜனாதிபதியின் ஆலோசகரான சரித ஹேரத், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளிட்ட சிலருடன் கலந்துரையாடினார்.

இதன்போது, 1988ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் ஜே.வி.பி. கிளர்ச்சி இடம்பெற்றது. அந்த நேரத்திலும் தேர்தல்கள் இடம்பெற்றன. மக்களின் வாக்களிப்புக் குறைவாக இருந்தது. அதேபோன்று இப்போதும் தேர்தலை நடத்தலாம். அதில் எந்தச் சிக்கலும். இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுள்ள அவசர நிலைமைக்குரிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்று குறிப்பிட்டபோது, அரசிடம் இப்போது பெரும்பான்மை இல்லை. நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்று அரசு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெறும்.

அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் அந்தச் சட்டங்களை நிறைவேற்ற முடியும் – என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தேர்தல் நடத்துவது தொடர்பான திகதியைத் தீர்மானிப்பது தேர்தல்கள் ஆணைக்குழு என்பது குறிப்பிடத்தக்கது. தேர்தல்கள் ஆணைக்குழு, தேர்தலை நடத்த முடியாமல் இருப்பது தொடர்பில் ஜனாதிபதியின் செயலருக்குக் கடிதம் அனுப்பியிருந்தமையும் நினைவில் கொள்ளத்தக்கது.

## சமுர்த்திப் பயனாளிகளுக்குக் கிட்டுவது நிவாரணம் அல்ல; கடன் முற்பணம்தான்!



யாழ்ப்பாணம்,ஏப்.03

வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற மக்களிற்கு சமுர்த்தி நிவாரணம் வழங்குவதாக கோட்டாபய அரசு அறிவித்துள்ள போதும் அது மீளச் செலுத்த வேண்டிய கடனேயெனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசினது கடன் தொடர்பில் வெளிவந்துள்ள தகவல் பிரகாரம் சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளிகளிற்கு மட்டும் அறிமுகப்படுத்திய இடர் கடனாக 'சஹன பியவர' என்ற இக்கடன் காணப்படுகிறது. அத்துடன் ஆறு மாத சலுகைக் காலத்துடன் ஒரு வருடத்தில் கட்டி முடிக்க வேண்டிய கடன் ஆகும். அந்த வகையில் 18 மாத காலத்திற்குள் கட்ட வேண்டும்.

முத்திரை பயனாளிகள் அனைவரும் இக்கடனை பெற முடியாது. ஏனெனில் கட்டாய சேமிப்பில் ரூ.12,000/ இற்கு மேற்பட்ட தொகை இருக்க வேண்டும். எனவே புதிதாக முத்திரைப் பயனாளிகளாக சேர்ந்தவர்களிற்கு இக்கடன் பெறமுடியாது போகலாம். இதற்கு மாற்றீடாக அருணலு கடன் அல்லது நுகர்வுக் கடன் வழங்க முடியும். எனினும் நுகர்வுக் கடனிற்கு வட்டி அறவிடப்படும்.

இக்கடன் மொத்த பெறுமதி ரூ.10,000/=.எனினும் அதில் ஐயாயிரம் ரூபா மட்டுமே அவர்களின் கரங்களைச் சென்றடையும். மிகுதி ஐயாயிரம் ரூபா அவர்களின் அங்கத்தவர் கணக்கில் வரவு வைக்கப்படும்.

வரவு வைக்கப்பட்ட ஐயாயிரம் ரூபாவில் அந்தப் பயனாளிக்கு உலர் உணவுப் பொதி சதொச , கூட்டுறவுச் சங்கத்தினூடாக கிடைத்தால் அவற்றிற்குரிய பெறுமதி கழித்து குறிப்பிட்ட விற்பனை நிலையங்களிற்கு அனுப்பப்படும். எனவே சத்தகைய பொதிகளையும் யாரும் இலவசம் என்று நினைக்க வேண்டாம்.

ஒரே நாளில் இக்கடன் எல்லோர் கரங்களிற்கும் சென்றடைய மாட்டாது. ஏனெனில் அத்தோடு ஒரு வங்கியில் 2500 இற்கு மேற்பட்ட பயனுகரிகள் இருக்கும் போது எல்லோர்க்கும் ஒரே தடவையில் வழங்குவது கடினம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.04.2020 இல் வெளியிடப்பெற்றது.